| | | | | |
|---|---|---|---|---|
| | **மூன்றாம் தவணைப் பரீட்சை - 2024** | | | |
| **தரம் 10** | **மனைப்பொருளியல்** | **நேரம் 3 மணித்தியாலம்** | | |
| **சுட்டெண் :-________________** | | | | |

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **இல 1-40 வரையான வினாக்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள விடைகளில் மிகச்சரியான விடையினை தெரிவு செய்து வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் சரியான எண்ணுக்கு புள்ளடி இடுக**

1) ஓர் எளிய காபோவைதரேற்று

1. மோல்ற்றோசு 2. செலுலோசு 3. கலற்றோசு 4. சுக்குரோசு

2) ஒரு பல் நிரம்பாத கொழுப்பமிலம்

1. லோரிக்கமிலம் 2. ஒலேயிக்கமிலம்
3.லினோலெயிக்கமிலம் 4. பியூத்திரிக்கமிலம்

3) ஒரு சுக்ரோஸ் மூலக்கூறுகள் பின்வரும் எவ் வெல்லங்களின் மூலக்கூறுகள் இணைவதால் உருவாகின்றது

1. சுக்ரோசு, லக்டோஸ் 2. குளுக்கோஸ்,மோல்டோஸ்
3. குளுக்கோஸ், பிரக்டோஸ் 4. பிரக்டோஸ் ,கலக்டோஸ்

4) புரத பூரணபடுத்தப்பட்ட ஒரு உணவானது

1. பருப்புக்கலந்தபசளிக்கறி 2. மரக்கரிரொட்டி
3. கீரைப்பிட்டு 4. பயறுக்கலந்த பாற்சோறு

5) நார்த்தன்மையான உணவுகளில் பிரதானமாக அடங்கியுள்ள காபோவைதரேற்று

1. செலுலோசு 2. மாப்பொருள் 3. பெக்ரின் 4. டெக்ஸ்ரின்

6) பாலில் காணப்படும் புரதம்

1. குளுட்டனின் 2. கேசின் 3. இலக்கியுமின் 4. லக்டோஸ்

7) விற்றமின் B குடும்பத்தை சேராத விற்றமின் வகை எது?

1. தயமின் 2. நயாசின் 3. பிரிடோக்ஸின் 4. அஸ்கோபிக்கமிலம்

8) கரட்டீன் காணப்படும் உணவு வகை எது?

1. பசளி 2. நிலக்கடலை 3.முட்டை 4. கரட்

9) சமைக்காத உணவுப் பொருட்கள் 100g இல் காணப்படும் போசணை பெறுமானத்தை காட்டும் அட்டவணையானது.

1.உணவுக்கூம்பகம் 2.போசணை அட்டவணை
3. போசணை தேவை அட்டவணை 4.உணவுத்தட்டு

10) கல்சியம் அகத்துறிஞ்சலுக்கு உதவும் விற்றமின் எது?

1. விற்றமின் A 2. விற்றமின் C 3. விற்றமின் D 4. விற்றமின் K

11)இறைச்சி, மீன் வகைகளை குளிர்சாதனப்பெட்டியில் களஞ்சியப்படுத்தக்கூடிய வெப்பநிலையானது

1.4℃-8℃ இடைப்பட்ட வெப்பநிலையில்

2.18℃ இற்கும் அதிக வெப்பநிலையில்

3.-18℃இலும் குறைந்த வெப்பநிலையில்

4.7℃-10℃ வெப்பநிலையில்

12) ஈரப்பதன் என்றால் என்ன?

1. நீரும், ஈரப்பதனும் காணப்படல்

2. நுண்ணுயிர்களின் வளர்ச்சியைத்தடுத்தல்

3. வளியில் அடங்கியுள்ள நீராவியின் அளவு ஆகும்

4. அறையின் வெப்பநிலையாகும்

13) மாப்பசையினைத் தயாரிக்கும் போது அதன் மீள் சக்தி மற்றும் இழையமைப்பினை சிறந்த முறையில் ஏற்படுத்திக் கொள்வதற்காக அதனை ஆயத்தப்படுத்தும் போது கையாளப்படும் நுட்ப முறையானது?

1.அடித்தல் 2.பிசைதல் 3. கலத்தல் 4.பதப்படுத்தல்

14) பின்வருவனவற்றுள் ஒட்சியேற்ற எதிரியாகச் செயற்படும் விற்றமின்கள்

1.ACE விற்றமின்கள் 2.BEK விற்றமின்கள் 3.ADB விற்றமின்கள் 4.DBC விற்றமின்கள்

15) நண்டு, சிப்பி, கொக்கோ, முட்டை மஞ்சட்கரு, எள்ளு பொரித்த முந்திரிகை, அவரையினங்கள் போன்ற உணவுகளில் அதிகம் காணப்படும் கனியுப்பு

1. இரும்பு 2. நாகம் 3.பொற்றாசியம் 4. செலனியம்

16)செயற்கையான இனிப்புச் சுவையை தரும் உணவுச் சேர்க்கையின் குறியீடு

1. $E_{100}$ 2.$E_{133}$ 3.$E_{210}$ 4.$E_{951}$

17)உணவுப் பொருட்களின் பெரும் போசணை அளவிடப்படுவது

1. கிலோகிராம் (Kg) 2. மில்லிகிராம் (mg) 3.கிராம்(g) 4. மைக்ரோகிராம்(mmg)

18) ஆனைக் கொய்யாவில் காணப்படும் கொழுப்பின் அளவு

1.8.3g 2.350kJ 3.20.1g 4)38g

19)புருனுஸ் முறையில் வெட்டும் அளவுகள்

1.3mmஅகலம் தடிப்பு 3mmதடிப்பு

2.2mmஅகலம் தடிப்பு 2mmதடிப்பு

3.4mmஅகலம் தடிப்பு 2mmதடிப்பு

4.3mmஅகலம் தடிப்பு 4mmதடிப்பு

20)கூடிய செறிவுள்ள ஊடகத்திலிருந்து குறைந்த செறிவுள்ள ஊடகத்திற்கு நீர்த் துணிக்கைகள் பங்கீடு புகவிடும் மென்சவ்விநூடாக பயணித்தல் எவ்வாறு அழைப்பர்

1. பரவல் 2.அகப்பிரசாரணம் 3. கடத்தல் 4. புறபிரசாரணம்

21)) கீழே குறிப்பிடப்பட்டுள்ளவற்றில் கட்டிளமைப்பருவப் பிள்ளைகளின் உடல் விருத்தி தொடர்பாக தவறானகூற்றாக அமைவது?

1.உடலுறுப்புக்களின் அளவு சீரற்றதாகக் காணப்படும்.

2.எலும்புகளின் அடர்த்தி அதிகரிக்கும்.

3.பெண் பிள்ளைகளின் கொழுப்புத் திசுக்களின் விருத்தி குறைவடைதல்

4. ஆண் பிள்ளைகளின் தசை நார்களின் வளர்ச்சி துரிதமடைதல்

22) கட்டிளமைப் பருவத்தில் பிள்ளைகளிடம் காணப்படக்கூடிய துணைப்பாலியல் மாற்றங்களின் இலட்சணமாக அமைவது?

1. சூலகத்தின் விருத்தி
2. விதைப்பையின் விருத்தி
3. உயரமும் எடையும் அதிகரித்தல்
4. கருப்பையின் விருத்தி

23) கர்ப்பிணித் தாயின் நாளாந்த போசணைத் தேவை தொடர்பாக கவனத்திற் கொள்ளும் போது 55kg நிறையையுடைய தாயின் கடைசி மூன்று மாதங்களுக்குரிய புரதத் தேவையின் அளவு?

1. 52g 2. 59g 3. 65g 4. 56g

24)கர்ப்பிணித் தாயொருவருக்கு தாய்சேய் பிணியாய்வு நிலையம் ஒன்றினால் தினசரி மேற்கொள்ளும் பரிசோதனையாவது?

1. குருதியமுக்கம் அளத்தல் 2. உயரம் அளத்தல்
3. குருதிச் செறிவு 4. VDRL பரிசோதனை

25) தாய்யப்பால் உற்பத்திக்காக உதவும் ஓமோன் வகை யாது?

1. புரோலக்டின் 2. புரொஜெஸ்ட்ரோன்
3. தெஸ்தெஸ்தரோன் 4. ஈஸ்ட்ரஜன்

26) A எனும் தையல் வகையின் பண்புகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- அலங்காரத் தையல் முறையொன்றாகும்
- இரு புறத்திலும் ஒளியூடுகாட்டும் ஓ கண்டி துணியின் கீழ்ப்பக்கத்தில் தைப்பதற்கு மிகவும் பொருத்தமானது
- மிக அருகில் தையல் இடப்படும்போது நிரப்புத்தையலின் தோற்றத்தைப் போன்றதாக இருக்கும். எனவே A எனப்படுவது?

1.பிரான்சிய முடிச்சுத் தையல் 2.நரம்புத்தையல்
3. மீன்முள்ளுத் தையல் 4. அடுக்கு நாணயவுருத்தையல்

27) அடிப்படைத் தையல் முறை, நுட்ப முறை தையல் முறை ஆகியன முறையே?
1. பிரான்சிய பொருத்து, தட்டைப் பொருத்து
2. தையற்கார சோம் தையல், சாதாரண பொருந்து
3. தையற்கார சோம் தையல், சோம் தையல்
4. நூலோடல், விஸ்பந்தையல்

28) ஆடை உற்பத்திக்காக பல்வேறு வகையான நார் வகைகள் பயன்படுத்தப்படுகின்றன. எனவே டெரலீன் நாரானது?
1. கனிய நார் வகையாகும்.
2. தொகுப்பு நார் வகையாகும்
3. பாதித் தொகுப்பு நார் வகையாகும்
4. விலங்கு நார் வகையாகும்

29) மனையின் துணையலங்காரப் பொருளை ஆக்குவதற்காக உபகரணங்களும் கருவிகளும் பயன்படுத்தப்படுகின்றன இவற்றுள் கருவிகள் மாத்திரம் கொண்ட தொகுதியாவது?
1. அளவு நாடா, தையல் வர்ணக்காட்டி, பென்சில்'
2. அளவு நாடா, கபில நிறத்தாள், வர்ணக்காட்டி
3. அளவு நாடா, பல்லுருக்கத்திரிக்கோல், பென்சில்
4. அளவு நாடா, பென்சில், வர்ணக்காட்டி

30) குழந்தை ஆடையின் மாதிரியுருவை நிர்மாணிப்பதற்கு தேவையான கபில நிறத் தாளின் நீளம், அகலத்தின் அளவிடையாவது?
1. 62cm 2. 45cm 3. 54cm 4. 52cm

31)குழந்தை ஆடையொன்றில் கழுத்து கைக்குழைச்சடி, விளிம்பு ஆகியவற்றை அலங்கரிப்பதற்காக பயன்படுத்தக்கடிய மிகவும் பொருத்மான தையல் முறைகளாவன?
1. சிப்பி வடிவ விளிம்புத்தையல், உருட்டிய விளிம்புத் தையல், பிறையோரத் தையல்
2. உருட்டிய விளிம்புத் தையல், முடிச்சுடனான சோம் தையல், தையற்கார சோம் தையல்
3. முடிச்சுடனான சோம் தையல், சிப்பி வடிவத்தையல், உருட்டிய விளிம்புத் தையல்
4. கம்பளித் தையல், உருட்டிய விளிம்புத் தையல், பிராளசியத் தையல்

32) குழந்தை ஆடையில் தோள் பகுதியை பொருத்துவதற்கு மிகவும் பொருத்தமான பொருத்து வகையாக அமைவது?
1. பிரான்சிய பொருத்து 2. தட்டைப் பொருத்து
3. வெளிப்புறப் பொருத்து 4. திறந்தத தட்டைப் பொருத்து

33) பல்வேறுபட்ட செயற்பாடுகளில் ஈடுபடுவதனால் ஒரு நபரிடம் ஏற்படக்கூடிய இயலுமையைக் குறிப்பது?
1. அறிவு 2. சிரமம் 3. திறன் 4. மனப்பாங்கு

34) ஒரு படுக்கையறை மாத்திரமே இருக்குமிடத்து அவ்வீட்டின் படுக்கையறையின் தளத்திட்ட அளவிடையாவது?
1. 120 சதுரஅடிகள் 2. 100 சதுரஅடிகள் 3. 90 சதுரஅடிகள் 4. 110 சதுரஅடிகள்

35) ஒரு மனையில் இயற்கையான வளியோட்டத்தை சிறந்த முறையில் பெற்றுக்கொள்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய வேறு வழிமுறைகளில் ஒன்று?

1. கண்ணாடி ஓடுகள் பதித்தல்
2. ஒளியூடு பரவக்கூடிய பைபர் சீட் பதித்தல்
3.. சுவருக்கு கண்ணாடி கற்களைப் பதித்தல்
4. கொங்கிறீற்று கிறீஸ், இரும்புவலை பதித்தல்

36) மனையின் பகுதிகளை ஒழுங்குபடுத்தும்போது "இணைந்த தொழிற்பாட்டு அலகுகள்" தொடர்பாக சரியான செயற்பாடாக அமைவது?

1. படுக்கையறையின் ஒரு பகுதியை படிப்பதற்காக பயன்படுத்தல்.
2. குளியலறைக்கு செல்வதற்காக நடைபாதையினை அமைத்தல். குளியல்
3. படுக்கையறையிலிருந்து குளியலறை, மலசலகூடம் என்பவற்றுக்கு செல்ல அருகில் அமைத்தல்,
4. விறாந்தைக்கு அருகில் பிரதான படுக்கையறையை அமைத்தல்.

37) மனையை ஒழுங்குபடுத்தும்போதும் அலங்கரிக்கும் போதும் பயன்படுத்தக்கூடிய துணையலங்கார வகையாவது?

1. சாப்பாட்டு மேசை 2. சுவர் அலங்காரம் 3. கண்ணாடி மேசை 4. சாய்மானக் கதிரை

38) பௌதீக வளங்கள் இரண்டாவது?

1. பணம், காலம் 2. இடவசதி, எரிபொருள்
3. மின்சாரம், இடவசதி 4. காலம், எரிபொருள்

39) ஒருவரது மனதில் ஏற்படும் விரும்பத்தக்கதும் விரும்பத்தகாததுமான உணர்வுகளைக் குறிப்பிடுவது?

1. மனப்பாங்கு 2. அறிவு 3. திறன் 4. சிரமம்

40) வரையறுக்கப்பட்ட இடவசதி உள்ளபோது இடவசதியை சிக்கனப்படுத்தும் வகையில் பயன்படுத்தக்கூடிய பலதொழிற்பாட்டுத் தளபாடங்களாவன முறையே?"

1. அடுக்குக் கட்டில், சுவர் அலுமாரி
2. அடுக்குக் கட்டில், மடிக்கும் மேசை
3. சுவர் அலுமாரி, மடிக்கும் துணி இராக்கை
4. இலாச்சுகளுடனான கட்டில்

## பகுதி -11

- 01.முதலாம் வினா உட்பட ஏனைய நான்கு வினாக்களைத் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

**01**.நிமாலினியின் குடும்பம் தாய், தந்தை பின்பிள்ளை பருவ மகன், கட்டிளமைப்பருவ மகள், மூன்று வயது மகன் மற்றும் பாட்டியும் அவர்களுடன் வசித்து வருகின்றனர். தந்தை அரச ஊழியர் ஆவார் நிமாலி ஆடைகள் தைத்து கொடுப்பதிலும் வீட்டுத்தோட்டம் செய்வதிலும் ஈடுபாடு கொண்டவள் அதனால் குடும்பத்திற்குத் தேவையான வருமானத்தையும் ஈட்டிக்கொள்கின்றனர் .

1)இக் குடும்பம் எவ்வகைக் குடும்பத்தை சேர்ந்தது?

2)கட்டிளமை பருவத்திலுள்ள பெண் பிள்ளையின் விசேட போசணை தேவைகள் 2 தருக.

3)தைக்கப்படும் ஆடைகளுக்குப் பயன்படும் அலங்கார தையல்கள் 4 தருக.

4)இங்கு குறிப்பிடப்படும் 3 வயது மகனின் பருவம் யாது?

5)வயோதிப பருவத்தினருக்கு உணவு கொடுக்கப்படும் போது விசேட கவனம் செலுத்துவதன் காரணம் 2 தருக.

6)கூட்டுகுடும்பமாக வாழ்வதனால் ஏற்படக்கூடிய அனுகூலங்கள் 2 தருக.

7)காபோவைதரேற்று அதிகமாக அடங்கிய உணவுகளை அதிகமாக உள்ளெடுப்பதனால் ஏற்படக்கூடிய பிரதான விளைவுகள் 2 தருக.

8)மனையாளிடம் காணப்படும் மனித வளங்கள் 4 தருக.

9)இக்குடும்பதிற்குப் பொருத்தமான இரவு வேளை உணவு பட்டியல் ஒன்றை திட்டமிடுக.

10)வீட்டுதோட்டச் செயற்கையில் ஈடுபடுவதனால் கிடைக்கும் அனுகூலங்கள் 2 தருக.

**02.**

1)இயற்கை நார்களை வகைப்படுத்தி அவை ஒவ்வொன்றிக்கும் உதாரணங்கள் தருக.

2)குழந்தை ஆடையில் காணப்பட வேண்டிய விசேட இயல்புகள் 3 தருக.

3)a) பிள்ளை ஆடையின் விளிம்பை அலங்கரித்து பூர்த்தி செய்யக்கூடிய முறைகள் 2 தருக

b) பிள்ளையின் ஆடைக்குப் பயன்படுத்தப்படும் அலங்கார தையல்கள் 2ஐ தருக.

**03.**

1)உணவு வேளைகளைத் திட்டமிடும் போது பயன்படுத்தக்கூடிய மூலாதாரங்கள் 3 தருக.

2)உடல் கட்டமைப்புக்குத் தேவையான கனியுப்புக்குகளில் கல்சியத்தின் தொழிற்பாடுகள் 3 தருக.

3)இக்குடும்பத்திற்கு தேவையான பகல் உணவு வேளை ஒன்றிற்கான உணவு பட்டியல் ஒன்றினைத் தயாரிக்குக.

**04.**

1)உணவை ஆயத்தப்படுத்தும் போது பின்பற்றப்படும் உரிய நுட்பமுறைகளைக் தருக.

2)உலர் வெப்பத்தில் சமையல் செய்யும் முறைகள் மூன்றினைக் குறிப்பிடுக. அவற்றுள் ஒரு முறையினை உதாரணத்துடன் விளக்குக.

3)உணவை சமைப்பதன் முக்கியத்துவம் நான்கைக் குறிப்பிடுக.

**05.**

1)"மேற்காவுகை ஓட்டம்" என்பதை வரைவிலக்கணப்படுத்துக.

2)மனையை அமைப்பதற்கு திட்டமிடும் போது கவனிக்க வேண்டிய காரணிகள் நான்கைக் குறிப்பிடுக.

3)இயற்கையான ஒளியும், காற்றோட்டமும், மனையினுள் கிடைப்பதால் ஏற்படும் நன்மைகள் நான்கைக் குறிப்பிடுக.

**06.**

1)கட்டிளமைப் பருவம் என்பதை வரைவிலக்கணப்படுத்துக.

2)கட்டிளமைப் பருவ ஆண் பெண்களில் காணக்கூடிய துணைப்பாலியல்புகளை தருக.

3)சம வயதினருடனான தொடர்பினால் இளைஞர் ஒருவரின் நடத்தை கோலத்தில் ஏற்படக்கூடிய தாக்கம் பற்றிக் கலந்தாலோசிக்கவும்.

**07.**

1)கர்ப்பிணித் தாய்க்கு பிணியாய் நிலையத்தின் மூலம் ஆற்றப்படும் செயற்பாடுகள் மூன்றைக் குறிப்பிடுக.

2)கர்ப்பிணித்தாய் எவ்வாறான போசனைகளை உள்ளெடுக்க வேண்டும். அதற்கான காரணங்களையும் குறிப்பிடுக.

3)பெண் இனப்பெருக்கத் தொகுதி யிலுள்ள கீழ்வரும் உறுப்புகளினால் ஆற்றப்படும் தொழிற்பாடுகள் ஒவ்வொன்று வீதம் தருக.

a) சூலகம் b) பலோப்பியன் குழாய் c) கருப்பை d) யோனிவழி